<u>சுருக்கம்</u>

ஊரக கட்டடங்கள் பராமரிப்பு, மற்றும் மேம்பாட்டுத் திட்டம் – 2010–11 ஆம் ஆண்டு ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்துவது குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி.3) துறை

**அரசாணை (1டி) எண். 256** **நாள் : 24.5.2010**

**படிக்க :**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடித எண். 37280/10/ஊ.வ.II.2, நாள் 18.5.2010.

********

<u>**ஆணை**</u>

**26.4.2010** அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானிய. கோரிக்கைக்குப் பதிலளித்துப் பேசிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் **2010–2011**–ம் ஆண்டில் ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு திட்டம் என்ற ஒரு புதிய திட்டம் ரூ– **100** கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும் என அறிவிப்பு செய்துள்ளார். அதனைத் தொடர்ந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் **2010–2011** ஆம் ஆண்டில் அத்திட்டத்தினை செயல்படுத்துவதற்குரிய வழிகாட்டு நெறிமுறைகளை அனுப்பி அதற்கு ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடுமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

**2.** ஊரக வளர்ச்சி ஆணையரின் கருத்துருவின் காரணமாகப் பரிசீலித்த அரசு ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தினை **2010–2011** ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்கு தேவைப்படும் நிதியான ரூ.**100** கோடியினை மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து முறையே ரூ.**33.33**, ரூ.**33.33** மற்றும் **33.34** கோடி என்று பகிர்ந்து அளிக்க ஆணையருக்கு அதிகாரமும் கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் இந்த ஆணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு உடனடியாக அமுல்படுத்த ஆணையருக்கு அனுமதியும் அளித்து அரசு ஆணையிடுகிறது.

3. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.1156/FS/P/2010 நாள் 20.5.2010– ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–600 015.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், (பயிற்சி)
சென்னை–600 015.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனர்,
மறைமலைநகர், காஞ்சிபுரம்.
பேரூராட்சிகள் ஆணையரகம், சென்னை–108.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை–9.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–6/18/35.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 35.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
செயலாளர், தகவல் தொகுப்பு மையம், சென்னை–32.
நிதி (ஊரக வளர்ச்சி) துறை, சென்னை–9.
நிதி (வரவு செலவு பொது 1/வரவு செலவு, பொது 2/ நிதி வழிவகை 1/ நிதி (சம்பளங்கள்) துறை, சென்னை–9.
திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.

<u>நகல்</u>
தலைமைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
இ.கோ / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் சீரமைப்புத்திட்டம் 2010–11 வழிகாட்டு நெறிமுறைகள்

## 1. முன்னுரை:

ஊரகச் சொத்துக்களான சாலைகள், ஊரணிகள், கண்மாய்கள், குடிநீர் விநியோக வசதிகள் மற்றும் கட்டடங்களை பராமரிப்பது ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் இன்றியமையாத கடமையாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உறுதுணையாக, சாலைகள், ஊரணிகள், கண்மாய்கள் ஆகிய சொத்துக்களை பராமரிக்க பல்வேறு அரசுத் திட்டங்களின் மூலமும் பராமரிக்கப்படுகின்றன. எனினும் சமுதாயக் கூடங்கள், சத்துணவுக் கூடங்கள், அங்கன்வாடி கட்டடங்கள், நியாய விலைக் கடைகள், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கக் கட்டடங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், நூலகக் கட்டடங்கள், இடுகாடு / சுடுகாடுகள், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டிகள் மற்றும் விளையாட்டு மையங்கள் சரிவர பராமரிக்கப்படாமல், மக்களால் முழுமையாக பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. ஏனவே ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உறுதுணையாக ஊரகச் சொத்துக்களை பராமரிப்பதற்காக ‘‘ ஊரகக் கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் சீரமைப்புத் திட்டம் ’’ என்ற ஒரு புதிய திட்டம் 2010–11ஆம் ஆண்டு முதல் ரூ.100 கோடி ஒதுக்கீட்டில் அறிமுகப்படுத்தப்படுகிறது.

## 2. கிராமங்களை தெரிவு செய்தல் :

2010–11 ஆம் ஆண்டில் ஊரக கட்டட பராமரிப்பு மற்றும் சீரமைப்பு திட்டம், 2006–07 மற்றும் 2007–08 ஆகிய வருடங்களில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட கிராம ஊராட்சகிளில் எடுத்து செயல்படுத்தப்படும். 2008–09, 2009–10 மற்றும் 2010–11 ஆகிய ஆண்டுகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில் இத்திட்டம் 2011–12ல் எடுத்துச்செய்யப்படும். இவ்வாறு அடுத்த இரண்டாண்டுகளில் ஊரகச் சொத்துக்கள் அனைத்தும் பராமரிக்கப்படும்.

## 3. பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப்பணிகளின் வகைப்பாடு:

<u>அ) தடை செய்யப்பட்ட பணிகள்</u>

ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் சீரமைப்புத் திட்டம் ஊரகச் சொத்துக்களை பராமரிக்க மற்றும் சீரமைப்பதற்காக மட்டுமேயான திட்டமாதலால் இத்திட்டத்தின்கீழ் புதிய பணிகள் (புதிய கட்டடங்கள் கட்டுதல், ஏற்கனவே உள்ள கட்டடங்களை விஸ்தரிப்பு செய்தல் / புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி / தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்) எடுத்துச் செய்ய அனுமதியில்லை. பாமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளிலும் பின்வரும் பணிகள் எடுத்துச் செய்ய தடை செய்யப்பட்டுள்ளது.

- ❖ மண்சாலை, சரளைமண் சாலை, மெட்டல் சாலை, தார்ச்சாலை மற்றும் சிமென்ட் கான்கிரீட் சாலைகள் ஆகியவற்றை பராமரிப்பு / புனரமைப்பு / சீரமைப்பு / மேம்பாடு செய்தல்.
- ❖ ஊரணி, கண்மாய், சிறுபாசனக்குளம் ஆகியவற்றை தூர்வாருதல் / பராமரித்தல் /சீரமைத்தல்.
- ❖ கைப்பம்பு, விசைப்பம்பு மற்றும் பைப்லைன் பராமரித்தல், பைப்லைன் நீட்டித்தல்.
- ❖ தெரு விளக்கு உபகரணங்கள் வாங்குதல்.
- ❖ அசையும் சொத்துக்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச்சாமான்கள் வாங்குதல்.

<u>ஆ. பணிகளின் விரிவான பட்டியல்</u>

தடை செய்யப்பட்ட பட்டியலில் உள்ள பணிகளைத் தவிர மற்ற பராமரிப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளலாம். எனினும் விரிவான பணிகளின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**i) சிறுபணிகள்:**

- ❖ கட்டிடங்களுக்கு வெள்ளை மற்றும் வண்ணம் பூசுதல் (3 ஆண்டுகளுக்குள் வெள்ளையடிக்கப்பட்ட/வண்ணம் பூசப்பட்ட கட்டடங்கள் நீங்கலாக)
- ❖ கான்கிரீட் கூரைகள் பழுது நீக்கம் செய்தல் (தட்டோடு பதித்தல் அல்லது தண்ணீர் கசியாமல் தடுத்தல்)
- ❖ ஓட்டுக் கூரைக் கட்டடங்களில் சேதமடைந்த ஓடுகள் / ரீப்பர்கள் / மரச்சட்டங்களில் ஏற்பட்ட சிறு பழுதுகளை சீர் செய்தல்.
- ❖ கட்டட சுவர்களில் உள்ள விரிசல்கள் சீர் செய்தல்.

- ❖ சேதமடைந்த தரைத்தளத்தினை சீர் செய்தல்



- ❖ கதவுகள், சன்னல்கள் பழுது நீக்கம் / முழுமையாக மாற்றியமைத்தல்.
- ❖ சுடுகாடு / இடுகாடுகளில் உள்ள எரியூட்டுக்கூடம் / காத்திருப்போர் கூடங்களை பராமரித்தல்.
- ❖ அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தில் உருவாக்கப்பட்ட ஊரக விளையாட்டு மையங்களை பராமரித்தல் (ஊஞ்சல், சறுக்கு, ஏற்ற இறக்கப்பாதை, கோல் கம்பங்கள் (Goal post) போன்ற நிறுவப்படக்கூடியவற்றை பராமரித்தல் பந்து, மட்டை போன்ற அசையும் விளையாட்டுச் சாதனங்கள், இத்திட்டத்தில் எடுக்கப்படுவதைத்தவிர்த்து அவற்றை ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்).
- ❖ சேதமடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் பராமரித்தல் மற்றும் சீரமைத்தல்.

**குறிப்பு:** ஊரக வளர்ச்சித்துறையால் கட்டப்பட்டு தற்போது இதர துறையினரின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கட்டடங்கள், சம்மந்தப்பட்ட துறையினரால்தான் பராமரிப்பு செய்யப்பட வேண்டும் என்பதால் நியாய விலைக்கடைகள், பால் உற்பத்தியாளர் சங்க கட்டடங்கள் போன்ற கட்டடங்களுக்கு வயரிங் செய்தல், மின்விசிறி மற்றும் இதர உபகரணங்கள் அமைத்துக்கொடுத்தல் போன்ற பணிகள் எடுத்துச் செய்யப்படுதல் கூடாது. ஆனால் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள சமுதாயக்கூடம், சுயஉதவிக்குழு கட்டடம் போன்ற கட்டடங்களுக்கு வயரிங், மின்விசிறி வசதிகள் செய்து தரலாம்.

**ii) பெரும்பணிகள்:**

- ❖ ஏற்கனவே உள்ள மிகவும் சேதமடைந்த ஓட்டுக் கூரைக் கட்டடங்களை முழுமையாக மாற்றி அமைத்தல்.
- ❖ ஆஸ்பெஸ்டாஸ் கூரைகளை முற்றிலுமாக அகற்றி ஓட்டுக் கூரைகளாக மாற்றியமைத்தல்.

**குறிப்பு:** பெரும் பணிகளைப் பொறுத்தவரை உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) ஒவ்வொரு பணியையும் பார்வையிட்டு, கட்டடத்தின் தன்மை மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய செலவினம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு எந்தெந்தப் பணிகளை எடுத்துச்செய்யலாம் என ஆராய வேண்டும்.

## 4. பணிகள் தேர்வு செய்தல் மற்றும் இறுதி செய்தல்:

**அ)** கீழ்க்கண்ட நபர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தேர்வுக்குழு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான கிராமச் சொத்துக்கள் ஒவ்வொன்றையும் பார்வையிட்டு தேவையின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய பழுது மற்றும் மேம்பாட்டு விபரங்களை ஆய்வு செய்து பட்டியலிட வேண்டும். தேர்வுக்குழு பின்வரும் நபர்களை உறுப்பினர்களாகக் கொண்டதாக இருக்கும்.

அ. வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) – குழு அமைப்பாளர்.

ஆ. ஒன்றியப் பொறியாளர்

இ. தொடர்புடைய ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்.

ஈ. கிராம ஊராட்சி மன்றத் தலைவர்.

உ. கிராம ஊராட்சி துணைத்தலைவர்.

ஊ. கிராம அளவிலான கூட்டமைப்பால் நியமிக்கப்படும் கிராம அளவிலான கூட்டமைப்பின் அலுவலக பிரதிநிதி.

**ஆ)** ஒரு குறிப்பிட்ட ஊரகச்சொத்து கட்டடம் மிகவும் பழுதடைந்து முற்றிலும் மாற்றப்பட வேண்டிய நிலையில் உள்ளதாக தேர்வு குழு முடிவு செய்யுமாயின், அக்கட்டிடத்தினை இத்திட்டத்தின் கீழ் பழுது பார்த்திட எடுத்துக்கொள்ளக்கூடாது.

**குறிப்பு:** முன்மொழியப்படுகின்ற பராமரிப்பு மற்றும் சீரமைப்புப்பணிகள், ஆணையர் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அவர்களால் தயார் செய்து அளிக்கப்படும் மதிப்பீட்டுப்படிவத்தில் (Assessment sheet) முன்னுரிமை அடிப்படையில் பட்டியலிடப்பட வேண்டும். குழு உறுப்பினர் அனைவரும், எடுத்துச் செய்யப்பட வேண்டியபணிகளின் தேவை குறித்த சான்றளிப்புடன் கையொப்பமிட வேண்டும்.

## 5. முன்மொழிவு செய்யப்படும் பணிகளை மேலாய்வு செய்தல்:

சரியான மற்றும் துல்லியமான மதிப்பீடுகள் தயார் செய்யப்படும் பொருட்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்படும் நிலையிலேயே மேலாய்வுகளுடன் இணைந்த தல ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியமானது.

சோதனை ஆய்வு மேற்கொள்ளப்படும்போது கீழ்க்கண்ட விபரங்கள் உறுதி செய்யப்பட வேண்டும்.

i. அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பழுது பார்ப்புப் பணிகள் ஏதும் தவறுதலாக விடுபடாமலிருத்தல்.

ii. தேவையற்ற இனங்கள் தவறுதலாக சேர்க்கப்படாமல் இருத்தல்.

iii. விரிவான மதிப்பீடு தயார் செய்தல்.

iv. பழுது பார்த்தலுக்கான மதிப்பீடுகள் அதிகமாக இருக்கும் பட்சத்தில், வேறு திட்டங்களின்கீழ் புதிய கட்டிடம் கட்டுதல் சரியாக இருக்குமா என ஆய்வு செய்தல்.

v. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ள அனுமதிக்கப்படாத பணிகள் சேர்க்கப்படாததை உறுதி செய்ய வேண்டும். (உ–ம்) அனுமதிக்கப்படாத கட்டிடங்களுக்கு மின் வசதி செய்தல்.

முன்மொழியப்படுகின்ற பணிகளை கீழ்கண்ட அலுவலர்கள் பின்வருமாறு மேலாய்வு செய்யவேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித்தலைவர் | 5% |
| 2. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | 10% |
| 3. | செயற்பொறியாளர் (ஊ.வ) | 10% |

## 6. நிர்வாக அனுமதி:

இப்பணிகளுக்கான நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட வேண்டும். நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன்பாக ஒவ்வொரு கருத்துருவிலும் கீழ்க்கண்ட விபரங்கள் இடம் பெற்றிருப்பதை ஆட்சித் தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

1. மதிப்பீட்டுப் படிவத்தில் தேர்வுக்குழு உறப்பினர்கள் அனைவரும் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை முன்னுரிமை அடிப்படையில் பட்டியலிட்டு கையொப்பமிட்டிருக்க வேண்டும். நிர்வாக அனுமதி வழங்கும்போது மாவட்ட ஆட்சித் தலைவர் ஊராட்சிக்கான நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணிகளை குறைத்துக் கொள்ளலாம்
2. ஒவ்வொரு பணிக்கும் விரிவான மதிப்பீடு தயார் செய்யப்பட வேண்டும்.
   எக்காரணத்தைக் கொண்டும் உத்தேச மதிப்பீட்டின் அடிப்படையில் கருத்துரு அனுப்பக்கூடாது.
3. கட்டிடங்களில் உள்ள பல்வேறு பழுதுகளையும் வெளித்தோற்றத்தையும் தனித்தனியாக புகைப்படங்கள் எடுக்கப்பட்டிக்க வேண்டும். (அனைத்துப் புகைப்படங்களும் மதிப்பீட்டுடன் இணைக்கப்பட வேண்டும்).

நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன்பாக ஒவ்வொரு கட்டிடமும் மேலாய்வு செய்யப்பட்டுள்ளதா என மாவட்ட ஆட்சித் தலைவர் உறுதி செய்ய வேண்டும்.

## 7. பணிகள் செயல்படுத்துதல்:

இத்திட்டம் கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்தப்படுதல் வேண்டும். ஒப்பந்தப்புள்ளி அடிப்படையிலேயே பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு கிராம ஊராட்சிக்குட்பட்ட ஒரே மாதிரியான பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிப்பங்களாக ஒப்பந்தம் கோரப்பட வேண்டும். இதன் மூலம் தேவையற்ற வேலைகளை தவிர்ப்பதுடன் மேற்பார்வையிடுவதற்கும் எளிதாக இருக்கும். அரசாணை நிலை எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் 20.12.2007–ல் தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல், பணிகள் வகை மற்றும் நிலை) விதிகள் 2007–ல் அறிவிக்கை – 2ல் உள்ள பட்டியல்–1ல் தெரிவித்துள்ள அறிவுரைகளின் படி ஒப்பந்தப்புள்ளிகளுக்கான நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும்.

## 8. நிதிப் பகிர்வு:

மாவட்டங்களுக்கிடையேயான நிதி ஒதுக்கீட்டினை

i) மாவட்டத்திலுள்ள ஊரக மக்கள் தொகை
ii) மாவட்டத்திலுள்ள குறைவான வருமானம் உடைய கிராம ஊராட்சிகள் மற்றும்
iii) மாவட்டத்தில் 250 மக்கள் தொகை கொண்ட உட்கடை கிராமங்களின் எண்ணிக்கை

ஆகிய காரணிகளின் அடிப்படையில் இறுதி செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராம ஊராட்சிகளுக்கிடையேயான நிதி ஒதுக்கீடும் ஊரக வளர்ச்சி ஆணையரால் பின்வரும் இரு கூறுகளின் அடிப்படையில் இறுதி செய்யப்படும்.

**i)** **நிலையான கூறு:** இது மூன்று வகைகளாக தரம் பிரித்து வழங்கப்படும்.

– குறைந்த வருவாய் உடைய கிராம ஊராட்சிகளுக்கு, நடுத்தர வருவாய் உடைய கிராம ஊராட்சிளுக்கு, அதிக வருவாய் உடைய கிராம ஊராட்சிகளுக்கு

ii) **மாறுபடும் கூறு:** இது ஒரு கிராம ஊராட்சியில் உள்ள மக்கள் தொகை மற்றும் 250க்கும் மேல் மக்கள் தொகை கொண்டஉட்கடை கிராமங்களின் எண்ணிக்கை அடிப்படையில் அமையும்.

மாவட்ட அளவில் மேற்கண்ட திட்டத்திற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் தனியாக கணக்கு துவக்க வேண்டும். பொருள் கூறுகளுக்கான நிதியினை கழித்து மீதமுள்ள தொகையினை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், நேரடியாக கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்க வேண்டும்.

## 9. ஆவணப்படுத்துதல்:

இத்திட்டத்தின் பல்வேறு பணிகளை, தேர்வு செய்தல் முதல் பணிகள் முடிவடையும் வரை உள்ள பணிகளை ஆவணப்படுத்த வேண்டும். பணிகள் முடிவுற்றவுடன், சொத்துகள் "ஊரக கட்டடங்கள்பராமரிப்பு மற்றும் சீரமைப்புத்திட்டத்தின்" கீழ் புதுப்பிக்கப்பட்டுள்ளது என்பதை அனைவரும் அறியும் வண்ணம் பெயர் பலகையினை அதற்கான செலவின விபரத்துடன் தமிழில் தெளிவாக எழுதிட வேண்டும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையருடன் கலந்தாலோசித்து இத்திட்டத்திற்கான மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில், எதிர் காலத்தில் ஏற்படும் சூழ்நிலை மாற்றங்களை கருத்தில் கொண்டு, தேவையான மாற்றங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, அரசு முதன்மைச் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பிரிவு அலுவலர்.